*KALAM International Research Journal*
*Faculty of Arts and Culture*
*South Eastern University of Sri Lanka.*
*15(2), 2022*

# இந்துக்களின் வழிபாட்டு மரபில் ஆண்தெய்வங்களும் குலக்குறியமும்: மட்டக்களப்பு மாவட்டத்தினை மையப்படுத்திய ஆய்வு

**ந. சுபராஜ்[1] & கே. ஆரணி[2]**
[1]மொழித்துறை, கலை,கலாசாரப் பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
[2]இந்துநாகரிகத்துறை, கலை,கலாசாரப் பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

Correspondence: subaraj84@seu.ac.lk

## கட்டுரைச் சுருக்கம்

மட்டக்களப்புத் தமிழகம் பல்லினப் பண்பாட்டையும், பல்லின மக்களின் வாழ்க்கை முறைகளையும் கொண்ட பிரதேசமாகும். இந்துப்பண்பாட்டு மரபின் தனித்துவத்திற்கு இம்மாவட்டமெங்கும் நிறைந்துள்ள சிறியளவும், பெரியளவுமாகிய கோயில்களே சான்று பகர்கின்றன. பண்பாட்டு வேர்கள் ஆழமாகப் புதைந்து போயிருக்கும் இப்பிரதேசத்தின் இந்து வழிபாட்டம்சங்களை பல்வேறு கட்டமைப்பில் வகைப்படுத்த முடியும். அவற்றில் ஒன்றாக குலக்குறி வழிபாடு காணப்படுகின்றது. குலக்குறியியம் மனித வாழ்க்கை முறையோடு காலங்காலமாகப் பரிணாமம் அடைந்து வரக்கூடிய ஒரு அடையாளம் அல்லது குறியீடு சார்ந்த வடிவமாகும். குலக்குறி என்பது "டோட்டம்" (Totem) எனவும் குலக்குறியியம் என்பது "டோட்டமிசம்" (Totemism) எனவும் அழைக்கப்படுகின்றன. இதில் விலங்கையோ பறவையையோ ஒரு பொருளையோ தங்களது குலக்குழு முழுமைக்கும் வழிகாட்டியாக, வணக்கத்திற்குரியதாக, மூதாதையர்களாகக் காண்பர். மட்டக்களப்பு மாவட்டத்தில் குலக்குறி சார்ந்த வழிபாடுகளையும் தெய்வங்களையும் அடையாளங் காணல், அவற்றிலுள்ள குலக்குறி வழிபாட்டிற்கான பண்புகளை விபரித்தல், அவற்றின் இன்றைய நிலைமைகள் பற்றி விளக்குதல் போன்றன இவ்வாய்வின் நோக்கங்களாகக் காணப்படுகின்றன. மட்டக்களப்பில் தனித்துமான வழிபாடாக விளங்கும் ஆகமம் சாரா வழிபாட்டின் ஒரு அங்கமாக குலக்குறி வழிபாடு காணப்படுகின்றது. இருப்பினும் குலக்குறி வழிபாட்டின் தன்மைகளைத் தழுவியே ஆகமம் சாரா வழிபாடுகள் இங்கு நடைபெறுகின்றது எனும் புரிதல் இப்பிரதேச மக்களிடம் காணப்படுகின்றனவா? என்பது ஆய்வுப்பிரச்சினையாக உள்ளது. குலக்குறி வழிபாட்டின் தனித்துவமான இயல்புகளையும் சிறப்புக்களையும் மட்டக்களப்பு மாவட்ட ஆகமம் சாரா வழிபாடுகளில் ஒன்றான ஆண் தெய்வ வழிபாடுகள் குலக்ககுறி வழிபாட்டின் மரபினை பேணி நிற்கின்றன எனும் கருதுகோளினை முன்வைத்து இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் புராதன குலக்குறி வழிபாட்டு நெறிகளில் குமார தெய்வம், வதனமார், வைரவர் போன்ற தெய்வங்களுக்கான சடங்குகள் முக்கியம் பெறுகின்றன. இவ்வகையில் மட்டக்களப்பு மாவட்ட ஆகமம்சாரா வழிபாட்டின் தன்மைகளைக் கொண்ட குலக்குறி வழிபாட்டு நெறிகள் இப்பிரதேச மக்களின் வாழ்வில் பாரியளவில் தாக்கத்தைச் செலுத்துகின்றன. குறிப்பாக ஆண் தெய்வ வழிபாட்டில் குலக்குறியத்தின் தன்மைகளை அதிகளவில் காணலாம்.

**பிரதான சொற்கள்:** குலக்குறி, மட்டக்களப்பு, ஆகமம்சாரா வழிபாடு, ஆண் தெய்வங்கள், அடையாளம்

## 1. அறிமுகம்

மட்டக்களப்பு மாவட்டச் சமூக வரலாற்றியலுடன் தொடர்பான வகையில் ஆகமம் சார் வழிபாட்டு முறை, ஆகமம் சாரா வழிபாட்டு முறை என்பன முதன்மை பெறுகின்றன. இப்பிரதேசத்தில் தனித்துவம் குன்றாத வகையில் இன்னும் மக்கள் தங்கள் சமூக மானிடத்தேவைகளை நிறைவேற்றிக் கொள்கின்ற ஓர் இடமாகவே ஆலயங்கள் விளங்குகின்றன. தற்கால சமூக கலாசார மாற்றம், சமஸ்கிருதமயமாக்கல், நவீன நாகரிகத்தின் மோகம் என மாறிக்கொண்டு வரும் இக்காலத்தில் இப்பிரதேச இந்துக்களின் மரபார்ந்த பண்பாட்டம்சங்களை வெளிக்கொணர்ந்து ஆத்மார்த்தமான

வழிபாட்டு முறைகளைப் பேண வேண்டிய நிலை இருக்கின்றது. அவ்வாறான வழிபாடுகளில் குலக்குறி வழிபாடுகள் முக்கியம் பெறுகின்றன.

மட்டக்களப்பு சமூகக் கட்டமைப்பில் சாதி, குடிகள் போன்ற அடுக்கமைவுகள் காணப்படுகின்றன. இத்தகைய குழுக்கள் தங்களுக்கென தனித்துவமான வழிபாட்டு முறைகளை காலங்காலமாக பேணி வருகின்றன. மட்டக்களப்பு மக்களின் இத்தகைய வழிபாடு ஒட்டுமொத்தமாக ஆகமம்சாரா வழிபாடு, ஆகமம் சார்ந்த வழிபாடு எனும் கண்ணோட்டத்தில் இதுவரை ஆராயப்பட்டனவே தவிர இவை குலக்குறிய கோட்பாட்டின் கீழ் இயங்குபவை எனும் ஆய்வுத்தளத்தில் வைத்து நோக்கப்படவில்லை. மட்டக்களப்பு மாவட்ட வழிபாட்டின் தனித்துவம் ஆகமம்சாரா வழிபாட்டில் உள்ளது என்பதில் மாற்றுக் கருத்தில்லை. இருப்பினும் குலக்குறியியக் கோட்பாட்டின் இயல்புகளை பிரதிபலிக்கும் வழிபாட்டு நெறிகளாகவும் அவை உள்ளன. அவற்றினை எடுத்துக் காட்டும் வகையில் இவ்வாய்வு அமைகின்றது.

## 2. ஆய்வுப் பிரச்சினை

மட்டக்களப்பில் தனித்துமான வழிபாடாக விளங்கும் ஆகமம் சாரா வழிபாட்டின் ஒரு அங்கமாக குலக்குறி வழிபாடு காணப்படுகின்றது. இருப்பினும் குலக்குறி வழிபாட்டின் தன்மைகளைத் தழுவியே ஆகமம் சாரா வழிபாடுகள் இங்கு நடைபெறுகின்றது என்பது பற்றியும் அவற்றில் குறிப்பாக ஆண் தெய்வ வழிபாட்டிலேயே குலக்குறியத்தின் தன்மைகள் அதிகளவில் காணப்படுகின்றன என்பது பற்றியதுமான புரிதல்கள் இன்றியே இப்பிரதேச மக்கள் இவ்வழிபாட்டை மேற்கொள்கின்றார்களா? என்பது ஆய்வுப்பிரச்சினையாக உள்ளது.

## 3. ஆய்வு நோக்கங்கள்

மட்டக்களப்பு மாவட்ட ஆகமம்சாரா வழிபாட்டின் தன்மைகளைக் கொண்ட குலக்குறி வழிபாட்டு நெறிகள் இப்பிரதேச மக்களின் வாழ்வில் பாரியளவில் தாக்கத்தைச் செலுத்துகின்றன. குறிப்பாக ஆண் தெய்வ வழிபாட்டில் குலக்குறியத்தின் தன்மைகளை அதிகளவில் காணலாம். அவ்வகையில் இவ்வாய்வின் நோக்கங்களாக மேல்வருவனவற்றைக் குறிப்பிடலாம். மட்டக்களப்பு மாவட்டத்தில் குலக்குறி சார்ந்த வழிபாடுகளையும் ஆண் தெய்வங்களையும் அடையாளங் காணல்; அவற்றிலுள்ள குலக்குறி வழிபாட்டிற்கான பண்புகளை விபரித்தல்; அவற்றின் இன்றைய நிலைமைகள் பற்றி விளக்குதல்

## 4. ஆய்வு முறையியல்

குலக்குறி வழிபாட்டில் முக்கியம் பெறும் வேடுவ சமூகம், நிலவுடைமைக்காரர்களின் பாதுகாப்பு, கால்நடைகளை பாதுகாத்தல், நோய் நொடிகளிலிருந்து மக்களை காத்தல், இறந்த முன்னோர்கள் வழிபாடு, சமூகவியல் ஒருங்கிணைப்பு, கூட்டு வாழ்க்கை என இந்துப் பாரம்பரிய பண்பாட்டு கட்டமைப்புச் சூழலை சடங்குகள் மூலம் அறிந்து கொள்ள கோயில் திருவிழாக் காலங்களில் சடங்கில் பங்கு கொள்வது அவசியமானதாகும். எனவே அங்குள்ள இடத்திற்கு நேரடியாகச் சென்று தரவுகள் பெறப்பட்டுள்ளன. இவ்வழிபாடுகள் நடைபெறும் இடங்களுக்கு சென்று சடங்கில் பங்கு கொள்வதன் மூலமும், அது தொடர்பாக அங்குள்ள ஆலய பூசகர்கள், கோயில் தலைவர்கள், காலங்காலமாக அங்கு வாழ்கின்ற மக்கள் போன்றவர்களிடம் கலந்துரையாடி, அவர்களின் கருத்துக்களை கேட்டறிதல், சான்றுகளை ஆவணப்படுத்தல், புகைப்படம் எடுத்தல் போன்ற செயற்பாட்டில் ஈடுபடுவதன் மூலம் தரவுகள் பெறப்பட்டுள்ளன. இவை யாவும் இவ்வாய்வின் முதனிலைத் தரவுகளாக (Primary Data) அமையும்.

அத்தோடு இவ்வழிபாடுகள் தொடர்பாக வெளிவந்த இலக்கியத் தரவுகளும் இணைய வழித் தரவுகளும் இரண்டாம் நிலைத் தரவுகளாக (Secondary Data) அமைகின்றன. இங்கு வரலாற்றியல் ஆய்வு, விபரண ஆய்வு மற்றும் ஒப்பியல் ஆய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வின் மூலம் தற்காலத்தில் இச்சடங்கு எந்தளவிற்கு சமூகத்துடன் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது என பகுப்பாய்வும் செய்யப்பட்டுள்ளது.

பண்புசார் ஆய்வாக (qualitative research) அமையும் இவ்வாய்வில் மாதிரிகள் (Sample) தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்ட பிரதேச செயலக பிரிவுகளில் கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் பிரிவு, கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலாளர் பிரிவு, போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவு, மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுகள் ஆய்வு எல்லைகளாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இப்பிரதேசங்களிலுள்ள குலக்குறி வழிபாட்டிற்குரிய தெய்வங்களில் ஆண் தெய்வங்களே ஆய்வுக்குரியனவாக மட்டுப்படுத் தப்பட்டுள்ளன. அவற்றில் 25% மான குலக்குறி வழிபாட்டிடங்களே ஆய்வு மாதிரிகளாக கொள்ளப்படுகின்றன.

## 5. இலக்கிய மீளாய்வு

மட்டக்களப்பில் புராதன குலக்குறி வழிபாட்டு நெறிகளில் குமார தெய்வச் சடங்கும், வதனமார் சடங்கும் முக்கியம் பெறுகின்றன. இவை பற்றிய பல்வேறு விடயங்கள் நாடகக் கண்ணோட்டத்தில் பேராசிரியர். சி. மௌனகுரு அவர்களால் அரங்கு ஓர் அறிமுகம் (2014) என்னும் நூலில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இவை வதனமார் வழிபாடு பற்றிய அடிப்படை அம்சங்களை புரிந்து கொள்ள வழிவகுக்கின்றன.

இதே போன்று ‘‘மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப் பண்பாடு’’ என்னும் நூலில் மட்டக்களப்புத் தமிழகத்தில் வதனமார் வழிபாட்டு முறை என்ற கட்டுரை (பக் - 67) சு.சிவரெத்தினத்தினால் எழுதப்பட்டது. இதில் வெல்லாவெளி மாரியம்மன் கோயிலில் உள்ள வதனமார் சடங்கு பற்றி விளக்கிச் சென்றுள்ளார். மாடுகளை நோய்களிலிருந்து காத்தல், பூசாரி தலைமையில் சடங்கு மேற்கொள்ளும் முறை, பூசைப்பெட்டி, ஆயுதப்பெட்டி, பாற்குடம் எடுக்கும் முறை எனப் பல அம்சங்களை எடுத்துக் காட்டியுள்ளார்.

இதே போன்று மட்டக்களப்புத் தமிழகத்தில் குமார தெய்வச் சடங்கு பற்றி கு.ரவிச்சந்திரன் (பக் - 70) எடுத்துக் காட்டும் கட்டுரையில் ஐந்து நாட்கள் கொண்ட சடங்கு, அவை செய்யப்படும் முறை என்பன பற்றிக் கூறுகிறார். மேலும் தேன் எடுக்கும் நிகழ்வு, யானை கட்டும் நிகழ்வு, கரடித் தெய்வம், கன்னிமார் சடங்கு எனப்பல விடயங்கள் பற்றி எடுத்துக்காட்டுகிறார். குமார தெய்வ வழிபாடு புராதன வழிபாட்டம்சம் கொண்ட சடங்கு என்பதனையும், சமூகத்துடன் இதன் முக்கியத்துவம் எவ்வாறு அமைந்து விடுகின்றது என்பதனையும் இதில் அறிய முடிகிறது.

குமார தெய்வ வழிபாட்டின் முக்கியத்துவம் தொடர்பாக பேராசிரியர். சி.மௌனகுரு ‘‘மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்’’ என்னும் (2014) நூலில் மட்டக்களப்பில் புராதன வழிபாட்டில் குமார தெய்வம், வதனமார் என்பன பெறும் முக்கியத்துவம் பற்றிக் கூறியுள்ளார். (பக் - 55) இதில் குறிப்பிட்ட சாதியினருக்குரிய தெய்வமாக வதனமார் வழிபடப்பட்டதாக கூறுகின்றார். இவை எமது ஆய்வில் புராதன வழிபாடுகள் குறித்த சாதியினரால் மேற்கொள்ளப்பட்ட வழிபாடாக அமைந்துள்ளமையை அறிவதோடு அதன் சமூகவியல் முக்கியத்துவம் இன்றும் காணப்படுகின்றனவா? என்பதனை எடுத்துச் செல்ல உதவுகின்றது.

## 6. பகுப்பாய்வும் முடிவுகளும்

### *6.1 குலக்குறி பற்றிய விளக்கம்*

மானிடவியளாலர்கள் குறிக்குறி தொடர்பாக பல கருத்துக்களை முன்வைத்துள்ளனர். **மக்லீனன்**, ‘‘குலக்குறி அமைப்புடைய சமுதாய நிலையே தொடக்க காலச் சமுதாய முறை, இந்நிலையைக் கடந்த பின்னரே இன்றுள்ள அனைத்து வகையான சமுதாயங்களும் வளர்ந்துள்ளன’’ என்று கருதுகிறார். (பக்தவக்சலபாரதி, 1990) ‘‘இயற்கைப்பொருள் வணக்கத்தில் இருந்து குலக்குறி தோன்றியது. அவற்றினூடு வணங்கப்பட்ட தாவரம், விலங்கு, இயற்கைப்பொருள் ஆகியவை முதலில் தனிமனிதனுக்கும் பின்னர் குடும்பத்தினருக்கும் வழங்கப்பட்டது’’ என்பார் **ஆல்பரி**. (பக்தவக்சலபாரதி, 1990) ‘‘உலகின் பல்வேறு சூழல்களில் வாழ்ந்த மனிதக் குழுவினர் அவரவர்

இயற்கைச் சூழல்களில் காணப்பட்டவற்றுள் சிறப்பானதொன்று வாழ்வுக்கு முதன்மையானது எனக் கருதியதால், அதனை அவர் தம் குலக்குறியாக ஏற்றுக்கொண்டனர்'' என்கிறார் **ஆண்ட்ரூஸ் லாங்**. (பக்தவக்சலபாரதி, *1990)*

அதாவது, தனிமனிதனோ குழுக்களோ தனக்கு சமமான தன் கூட்டத்து மக்களுள் ஒருவராகக் கருதி ஒரு விலங்கையோ பறவையையோ தாவர வகையையோ அணுகி நடந்து கொள்வானேயானால் அது நிச்சயம் குலக்குறிப் பண்பாட்டிற்கே உரிய இயல்புகளில் ஒன்றாகும்.

### *6.2 ஆண் தெய்வ வழிபாட்டில் குலக்குறி*

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்துக்களின் வழிபாட்டின் தனித்துவம் ஆகமம்சாரா வழிபாட்டு நெறிகளிலேயே வெளிப்படுகின்றன. இவ்வழிபாட்டில் ஆண் தெய்வ வழிபாடு, பெண் தெய்வ வழிபாடு என இரு நிலைகள் உண்டு. இவற்றில் வைரவர், வதனமார், குமார தெய்வம், நாகதம்பிரான், பெரிய தம்பிரான், பெரியசாமி போன்றவை ஆண் தெய்வ வழிபாட்டிற்குரியன. இதுபோல் கண்ணகி, திரௌபதை, காளி, கடலாச்சி, பேச்சி போன்றன கிராமிய பெண் தெய்வங்களாகும். இவற்றில் ஆண் தெய்வ வழிபாட்டில் குலக்குறி வழிபாட்டிற்கான இலக்கணங்களை இவ்வாய்வு மேற் கொள்கின்றது.

### *6.3 வைரவ வழிபாடு*

வைரவ வழிபாடு ஆகமம் சார்ந்த வழிபாட்டு முறையிலும், ஆகமம்சாரா வழிபாட்டு முறையிலும் செல்வாக்கு செலுத்தி வருகின்றது. ஆனாலும் மட்டக்களப்பில் வைரவர் வழிபாடு ஆகமம்சாராத முறையில் தான் அதிகமாக மேற்கொள்ளப்படுகின்றது. ஆகமம் சாரா வழிபாட்டில் அவருக்கு உருவங்களை வைத்து வழிபடுகின்ற முறை காணப்படுகின்றது. ஆகமம்சாரா வழிபாட்டில் உருவம் இல்லாமல் அவருக்கு உரித்தான தனிப்பட்ட குறியீடு காணப்படுகின்றது.

மட்டக்களப்பில் வைரவருக்குரிய முதன்மையான குலக்குறி அடையாளம் ''திரிசூலம்'' ஆகும். இதுவே வைரவருக்கான குறியீடாக அமைகின்றது. திரிசூலத்தினை அடிப்படையாகக் கொண்டு வைரவர் வழிபாடு இங்கு மேற்கொள்ளப்படுகின்றது. அத்தோடு வைரவர் வழிபாட்டினை குறியீட்டினடிப்படையில் மட்டக்களப்பில் பல்வேறு இடங்களில் காணமுடிகின்றது.

மட்டக்களப்புப் பிரதேசங்களில் இடம் பெறும் வைரவர் வழிபாட்டினை பொதுவாக மூன்று வகைப்படுத்தலாம்.

1. வீடுகளில் இடம்பெறும் வைரவர் வழிபாடு
2. பயிர்ச்செய்கை நிலங்களில் நிகழ்த்தப்படும் வைரவர் வழிபாடு
3. ஆலயங்களில் வைரவருக்குரிய வழிபாடு

வைரவ வழிபாட்டில் குலக்குறியமாக திரிசூலம் காணப்படுகின்ற போதிலும் சில இடங்களில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. அதற்கமைய வைரவர் வழிபாட்டின் குலக்ககுறிக்குரிய தன்மைகளை மேல்வரும் 06 விதங்களில் நோக்கமுடியும்.

1) திரிசூலம் அல்லது இரட்டைத் திரிசூலம்
2) திரிசூலத்துடன் தென்னம்பாளை அல்லது கமுகம்பாளை
3) கல்
4) செவ்விளநீர்
5) திரிசூலமும் பொல்லும்
6) கள்ளிச் செடி

இங்கு குழுக்களுக்குரிய குலக்குறி எண்ணற்ற இயற்கைப் பொருட்களோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. இதனால் திரிசூலம் முதன்மைக்குறியாகவும் தென்னம்பாளை, கமுகம்பாளை, கல், செவ்விளநீர் முதலியன துணைக்குறிகளாகவும் உள்ளன.

மட்டக்களப்பில் வீட்டுச்சடங்கினை எடுத்து நோக்குகையில் அவர்கள் வைரவருக்கு பந்தல் அமைத்து வழிபாடு செய்கின்ற மரபு உள்ளது. இம்மரபில் குடும்பம் குடும்பமாகச் சேர்ந்து குழுவாகச் செய்யப்படுகின்றது. அதாவது வீட்டில் ஒரு வைரவர் பந்தல் இருந்தால் காலம் காலமாக குறிப்பிட்ட பரம்பரையினரே வைரவர் சடங்கினைச் செய்வர். வருடத்திற்கு ஒரு முறை இதனைச் செய்கின்றனர். (மகேஸ்வரலிங்கம், 1996) வீட்டில் வைரவருக்குச் செய்யும் போது சிலை வைக்கப்படுவதில்லை. மாறாக "திரிசூலம்" அடையாளப்பொருளாக வைக்கப்படும். (மகேஸ்வரலிங்கம், 1996) இம்முத்தலைச் சூலம் மும்மூர்த்தி தத்துவத்தைக் குறிக்கின்றது. மட்டக்களப்பில் சூலத்தை கோயில்களில் அமைந்துள்ள மரங்களாகிய வேம்பு, அரசு, நாவல், ஆல், புளி, மருது போன்றவற்றில் குத்தி வழிபட்டனர். அதுவே பின்னர் புளியடிவைரவர், வேம்படிவைரவர் என்ற பெயரையும் பெற்றது.

வீடுகளில் வைரவருக்குச் செய்யும் பூசை முறையானது "வைரவருக்குச் செய்தல்" என அழைக்கப்படும். (சுகந்தி சுப்ரமணியம், 2006) குறிப்பிட்ட ஒரு நாளில் பந்தல் அமைத்து தென்னம்பாளையும், இளநீரும் வைக்கப்படும். அரிசிமாவினால் கஞ்சா ரொட்டியும் மொந்தன் வாழைப்பழ மடையும் பரவப்படும். இங்கு மொந்தன் வாழைப்பழம் முக்கியமானது. சில இடங்களில் ரொட்டி, வெண்பொங்கல், சக்கரைப் பொங்கல், பஞ்சாமிர்தம், துள்ளுமா, வடை என்பன படைக்கப்படும். (சுகந்தி சுப்ரமணியம், 2006)

கமுகம்பாளை, தென்னம்பாளை, தாமரைப்பூ என்பவற்றை மடையில் வைத்து அலங்காரம் செய்து வைரவர் அகவல்/காவியம் பாடப்படும். (மகேஸ்வரலிங்கம், 1996) வருடாவருடம் வீட்டில் செய்யப்படும் வைரவர் பூசையினை செய்யாவிட்டால் அந்த குடும்பத்திற்கு பாதகமான விளைவுகள் ஏற்படும் என்பதனால் அதனை தவறாது பின்பற்றி வருகின்றனர். இது பயஉணர்வு, நம்பிக்கை என்பவற்றின் வெளிப்பாட்டுத் தன்மை ஆகும். பூசாரியே படையல்களைப் படைத்து பூசையினை மேற்கொள்வார். பூசாரி தன்னை பூசை செய்வதற்குரியவராக மாற்றிக் கொள்வார்.

குறித்த பரம்பரையினைச் சேர்ந்த ஒருவரரே வைரவருக்கு சடங்கினை நிகழ்த்துவார். அந்த நபரில் சடங்கின் போது வைரவர் வந்திறங்குவார். இது "வைரவர் கலை" என அழைக்கப்படும். (மகேஸ்வரலிங்கம், 1996) குலக்குறிக்கும் குலத்தின் உறுப்பினருக்கும் இடையிலான நெருங்கிய உறவுடன் தம்மை குலக்குறிக்குச் சமமானவர்களாகவும் அடையாளம் காணுகின்றனர். அத்தகைய வைரவர் கலையினை எல்லோராலும் செய்ய முடியாது. குறிப்பிட்ட ஒரு நபரால் தான் செய்ய முடியும். அவர் இறந்தால் அவருடைய பரம்பரையினைச் சேர்ந்த மற்றுமொருவரால் நிகழ்த்தப்படும். பந்தல் அமைத்து வழிபாடு செய்யும் போது அதற்கு அதிக மதிப்பு கொடுக்கப்படுவது மாத்திரமன்றி அது அச்சத்திற்குரிய பொருளாகவும் பார்க்கப்படுகின்றது.

வயல்பகுதிகளில் இடம் பெறும் வைரவர் வழிபாட்டினை நோக்குகையில் கதிர் கண்ட சடங்கு, புதிர்ச் சடங்கு, களவெட்டிச் சடங்கு என ஒரு போகத்திற்கு குறைந்தது மூன்று முறை அல்லது இரண்டு முறை வைரவர் வழிபாடு நிகழ்த்தப்படுகின்றது. (மகேஸ்வரலிங்கம், 1996) இங்கு பந்தல் அமைத்து வைரவர் வழிபாடு இடம்பெறும். வேளாண்மைச் சமுதாய குழுவினரிடையில் தொழில் சார் நம்பிக்கையில் குலக்குறியத்திற்கு பங்களிப்புண்டு. மானுட வாழ்க்கையின் உளவியல் நடத்தையின் மனம் சார்ந்த பழக்கங்களைக் கொண்டது குலக்குறிய வடிவமாகும். அனேகமாக வயல்வெளிகளில் வைரவருக்கு கஞ்சா ரொட்டிஇ கள்ளு, சாராயம் வைக்கப்படுகின்றன. உதாணமாக அரசடித்தீவு, பண்டாரியாவெளி, கடுக்காமுனை, கன்னங்குடா, பெரியநீலாவணை போன்ற இடங்களில் இவ்வழமையைக் காணலாம்.

வைரவர் வழிபாட்டில் ஒரு விலங்கு அல்லது ஒரு செடி இயற்கைப்பொருள் குலக்குறியாக அமையும் சந்தர்ப்பத்தினை கன்னங்குடா பிரதேசத்தில் காணலாம். இங்கு கள்ளிச்செடி குலக்குறியாக அமைந்துள்ளது. கள்ளிச் செடிக்கு பட்டு கட்டப்பட்டு செங்கல்லினால் சுற்றி வளைத்து திறந்த வெளியில் வைரவருக்குரிய குறியாக வைக்கப்பட்டுள்ளது. சடங்கு நேரத்தில் பந்தல் அமைத்து மடை வைத்து வழிபாடு இடம்பெறும்.

கோயிலை காவல் செய்வதோடு சமூகத்தையும் காவல் செய்வதால் மட்டக்களப்பு மக்களிடையே வைரவரின் வாகனமான 'சுவானம்' எனப்படும் நாயும் வணங்கப்படத்தக்கதாகவே கருதப்படுகின்றது. எனவே வைரவரை குறிக்கும் சூலம், அதனை கொண்டுள்ள மரம், நாய் என்பன அம்மக்களின் குலக்குறிகளாக உள்ளன.

வைரவர் வழிபாடு கோயிலில் ஆகமம் சார்ந்து வழிபடப்படுகின்ற போது குலக்குறியின் தன்மையைப் பெறவில்லை. வீட்டுச் சடங்குகளில் அது குலக்குறி தன்மை கொண்டதாக இருக்கின்றது. ஆகமம் சாரா வழிபாட்டில் வைரவரை வழிபடும் இடத்தை "வைரவர் பந்தலடி" என அழைப்பர். வைரவர் பந்தலானது இயற்கையோடிணைந்து உருவாக்கப்பட்ட ஒன்றாக உள்ளது. வீட்டின் வெளிவாசலில் இது அமைக்கப்படும்.

பந்தல் அமைக்கும் முறை 02 வகைப்படும்.

1. நிரந்தரமாக அமைக்கும் பந்தல்
2. நிரந்தரமல்லாத பந்தல்

நிரந்தரமாக அமைக்கும் பந்தலினை பலமான மரத்தினைக் கொண்டு வடிவமைப்பார்கள். தினந்தோறும் திரிசூலத்திற்கு பூக்கள் வைத்து வணங்குவர். நிரந்தரமில்லாத பந்தலை பூவரசங்கம்பினைக் கொண்டு தட்டு வடிவிலமைத்து தென்னம் குருத்துக்களால் சுற்றி வளைத்து அலங்கரிப்பர்.

### *6.4 குமார வழிபாடு*

குமார தெய்வம் பண்டைய காலத்திலிருந்து மக்களால் வழிபடப்படும் ஆகமம்சாரா தெய்வங்களுள் ஒன்றாகும். இத் தெய்வத்திற்கு ஆண்டுக்கொருமுறை சடங்கு நடைபெறும். குமார வழிபாட்டின் குலக்குறிக்கான தன்மைகளை 05 விதங்களில் நோக்கமுடியும்.

1) பந்தல் அமைத்து வாழைக்காய் மடை குலக்குறி (கிரான்)
2) வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் (மடைப்பொருள்) எனும் இயற்கைசார்ந்த குலக்குறி (முறுத்தானை)
3) காட்டுக்கு மத்தியில் மரத்தினை குறியாக வழிபடல் (பண்டைக்காலம்-முறுத்தானை)
4) பீட வடிவம் (நீலாவணை)
5) முகக்களை (சூரியனைப் போன்ற வடிவத்தில் முறுக்கு மீசை வடித்தினால் செய்யப்பட்ட வடிவம் - கிரான்)

குமார வழிபாட்டிற்குரிய சடங்கானது தனிப்பட்ட இல்லங்களிலும் சில இடங்களில் ஊர் சேர்ந்தும் செய்யப்பட்டு வருகின்றது. (மௌனகுரு, 2003) குமார தெய்வத்திற்கு நிரந்தரமான கோயில் இல்லை. தற்காலிகமாக கோயில் அமைத்துச் செய்யப்படும். முன்பு இச்சடங்கு நடந்த இடங்களில் பிற்பட்ட காலங்களில் குடியேறியவர்களும் இவ்வழிபாட்டை செய்து வந்தமையைக் காணமுடிகின்றது. குமார வழிபாட்டில் மன்றாட்டு முறையே பிரதானமானது. இத்தெய்வம் ஏனைய தெய்வங்கள் போல கட்டுக் கூறுவதுமுண்டு. இவ்வழிபாட்டில் 3 நாட்கள் அல்லது 5 நாட்கள் அல்லது 7 நாட்கள் என இடத்துக்கிடம் பூசை நடைபெறும் நாட்களின் எண்ணிக்கை மாறுபடுகின்றது.

வருடாந்த சடங்கிற்கென ஒரு நிலப்பகுதி வருடந்தோறும் தெரிவு செய்யப்படும். தெரிவு செய்த நிலப்பகுதியினை துப்புரவு செய்து பந்தல் அமைக்கப்படும். பந்தல் அமைப்பதற்கென துண்டு போடப்படும். துண்டின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு எந்தெந்த இடத்தில் எந்தெந்தப் பந்தல்கள் போட வேண்டும் என்றும், எந்தெந்த இடங்களில் எந்தெந்த தெய்வங்களை வைக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்படும். (மௌனகுரு, 2003) இச்சடங்கு நடைபெறும் இடத்தில் முக்கோணமான வடிவில் பந்தல் அமைக்கப்படும். ஆலாத்தித் தெய்வம் வருகையின் பின் வேறு பல தெய்வங்களும் கப்புகனாரில் வெளிப்படும். மூன்று பக்கங்களும் இயற்கைப்பொருட்கள் கொண்டு அலங்கரிக்கப்பட்டிருக்கும். பந்தலிலுள்ள நிலத்தில் வெள்ளைச்சீலை விரித்து அதில் மடை வைப்பர்.

குலக்குறியம் என அழைக்கப்படும் இயற்கைப்பொருள் அல்லது விலங்குகள் என்பவற்றோடு வேடுவச்சமூகக் குழுக்களுக்கு பல வழிகளில் உறவுகள் உள்ளன. அவ்வகையில் குமாரவழிபாட்டில் குலக்குறி வணக்கத்துக்குரிய உறவு முறையாக வெளிப்படுவதைக் காணமுடிகின்றது. இவர்களது முன்னோர்கள் வணங்கிய தெய்வங்கள் அனைத்தும் கப்புகனாரின் மேல் பல வடிவங்களில் வெளிப்படுவதாகக் கூறுகின்றனர். இவையே "வேட கலைத் தெய்வங்கள்" ஆகும். அவற்றுள் குமாரரின் வடிவங்களாக குமாரதெய்வம், கொழும்புக்குமாரர், கண்டிக்குமாரர், அழகுக்குமாரர், காலிக்குமாரர் என உருமாற்றம் பெறுகின்றது.

பயங்கரமான தெய்வங்களும் கப்புகனாரின் மேல் வெளிப்பட்டு நிற்கும். நீலிக்கூட்டம் எனப்படும் மாந்தி, ராஜிகராஜா, ராஜபணிக்கா போன்ற சிலவற்றைக் கூறலாம். (மௌனகுரு, 2003) குழந்தை களின் நோயோடு தொடர்புபட்ட இவை பறவை வடிவில் வருவதாகவும் அத்தெய்வங்கள் பறவைகள் எனவும் நம்புகின்றனர். இவ்வாறான பயங்கர நோயினை தரும் தெய்வங்களை கட்டுப்படுத்தும் தன்மை குமாரதெய்வத்திற்கு உண்டு.

குமார வழிபாட்டில் ''கழுமரம்'' முக்கிய துணைக்குலக்குறியினுள் ஒன்றாகும். திருக்கொன்றை அல்லது வேப்பமரத்தினை வெட்டி எடுத்து கழுமரம் உருவாக்கப்படும். வெட்டப்பட்ட மரக் குற்றியானது மேல் நோக்கிய முனையில் கூராக அமைக்கப்படும். குமாரதெய்வத்திற்கு வழிபாடி யற்றுபவரால் தான் கழுவடிவம் செய்யப்படும்.[20] குறிப்பிட்ட காலத்தின் பின்னர் பாதிப்படைந்த கழுமரத்தினை நீக்கி புதிதாக மரம் தெரிவு செய்யப்பட்டு கப்புகனாரால் நடப்படுகின்றது.

குமார தெய்வவழிபாட்டில் ஒவ்வொரு குமாரருக்கும் வேறு வேறு விதமான துணிபோடப்பட்டிருக்கும். குமார தெய்வவழிபாட்டில் புள்ளிக்காரன் என அழைக்கப்படும் தெய்வத்திற்கு புள்ளி வைக்கப்பட்ட துணியினைப் பயன்படுத்துவர். புள்ளிக்காரனுக்கு தெய்வமாடுபவர் புள்ளியாலான சீலையினையே உடுத்தியிருப்பார். அக்குழுவினைச் சேர்ந்த மக்களால் ''லேஞ்சி'' என அழைக்கப்படுகின்றது. (மௌனகுரு, 2003) குமார வழிபாட்டில் தெய்வமேறி ஆடுவோர் அம்பு, வில், ஈட்டி என்பவற்றினைக் கொண்டு பந்தலடியில் ஆடுவர். அம்மக்களின் வாழ்வியல் நெறிகளூடாக குலக்குறிகள் இணைவுறுகின்றன. விலங்கு வேட்டையாடுதல் எனும் அம்சம் தொடர்புற்று குலக்குறி வடிவம் அம்மக்களோடு பின்னிப் பிணைவதனைக் காணலாம்.

### *6.5 பெரியதம்பிரான்*

பெரியதம்பிரான் ஆகமம்சாராத வழிபாட்டு முறைகளில் காணப்படும் தெய்வம் ஆவார். இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரியதம்பிரான் வழிபாடு ஆங்காங்கே காணப்படுகின்றது. மட்டக்களப்பு வழிபாட்டு மரபில் பெரியதம்பிரானுக்குரிய குலக்குறி அடையாளம் ''சூலம்'' ஆகும். பெரியதம்பிரான் வழிபாட்டிடம் பந்தலினால் அமைத்தும் சில இடங்களில் ஓலைக் கொட்டில்களாகவும் வேயப்பட்டுள்ளன. பின்னர் ஓட்டினாலும் கிடுகுகளினாலும் வேயப்பட்டு கட்டிடங்களாக அமைக்கப்பட்டுள்ளன. (குணசிங்கம், 2022) ஓலை வேய்ந்த கோயில்களில் பரிவார தெய்வங்களுக்கு பந்தல் அமைத்து வழிபாடு செய்யப்படும். மட்டக்களப்புப் பிரதேசத்தில் அமைந்த பெரியதம்பிரான் ஆலயங்களில் அதிகளவாக சூலம் தான் அடையாளப் பொருளாக உள்ளது.

பெரியதம்பிரான் போற்றப்படும் குறியீட்டு வடிவத்தினை 4 விதங்களில் நோக்க முடியும்.

1. சூல வடிவம்
2. பீட வடிவம்
3. முகக்களை வடிவம்
4. சுதையில் செய்த வடிவம்

முகக்களை வடிவம் மரத்தில் செய்யப்பட்டு முறுக்கிய மீசை, சுருட்டை முடியுடன் கம்பீரமாக காணப்படுகின்றார். சில இடங்களில் அமைக்கப்பட்டுள்ள சுதைவடிவங்களில் இரண்டு கைகள் கொண்டு நிற்கும் நிலையில் அமைக்கப்பட்டுள்ளார். எனவே பெரியதம்பிரானின் முதன்மைக் குலக்குறியத் தன்மையினை சூலம் பெறுகின்றது.

சலவைத் தொழில் செய்வோருக்குரிய வழிபாடாக பெரியதம்பிரான் விளங்குகின்றார். இவர்கள் பெரியதம்பிரானை பாதுகாப்பவன், துணைவன் என நம்புவர். பெரியதம்பிரான் சடங்கில் பூசாரி அல்லது கட்டாடி, தேவாதிகள், பானை எடுப்போர் முக்கியத்துவம் பெறுகின்றனர். குறிப்பிட்ட குழுவினைச் சேர்ந்த நபர்களாலேயே இச்சடங்கு மேற்கொள்ளப்படுகின்றது. (குணசிங்கம், 2022)

பெரியதம்பிரான் வழிபாட்டில் குலக்குறியத்திற்கான பல பண்புகளைக் அடையாளங் காணலாம். வருடாந்தச் சடங்கின் போது முதன் முதலில் வேள்வி நடைபெறும் இடத்தினை சுத்தம் செய்து கதவு திறக்கப்படும். ஆதி காலத்தில் பல்லியிடம் கட்டளை கேட்டுப் பொங்கல் பொங்கும் முறை காணப்பட்டது. காலப்போக்கில் அம்முறை அருகி விட்டது. குலக்குறி வழிபாட்டில் ''பல்லி சகுனம்

எழுப்புதல்'' என்பது குறியீட்டின் தன்மை ஆகும். பூசாரியார் பெரியதம்பிரான் பத்ததிக்கமைவாக பூசையைச் செய்வார்.

பெரியதம்பிரான் வேள்விச்சடங்கு ஆரம்பிக்கும் காலத்தில் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் உள்ள கோயில்களில் கொடியேற்றம் நடைபெறாது. பெரியதம்பிரான் பூசாரிமார்கள் தெய்வங்களைக் கொடிக்கம்பத்தில் கட்டிப் போடுவார்கள் என்ற பயம் ஏனைய கோயில்களில் உண்டு. பெரியதம்பிரான் சடங்கினை பிராமணர்களோ வேறு குலத்தினைச் சேர்ந்தவர்களோ செய்ய அனுமதியில்லை. (கோபாலப்பிள்ளை, *2022*) காரணம் பெரியதம்பிரானின் எதிரிகளாக பிராமணர்கள் கருதப்படுகின்றார்கள். குலக்குறியின் மீதான வியப்பினையும் அச்ச உணர்வினையும் இது வெளிப்படுத்துகின்றது.

### *6.6 வதனமார் வழிபாடு*

மட்டக்களப்பு மக்களின் வாழ்வியலில் கால்நடை வளர்ப்பு மற்றும் விவசாயத்தோடு தொடர்புபட்ட தெய்வமாக வதனமார் முக்கியத்துவம் பெறுகின்றார். இதனால் ''பட்டிக்காரன்'' எனச் சிறப்பாக அழைக்கப்படுகின்றார். விவசாயப் பின்னணியில் மாடுகளுக்கு மதிப்பளித்து இயற்றப்படும் வழிபாடு இதுவாகும்.

இந்தியப் பழங்குடிகளில் பல குலக்குறி பண்பாட்டின் அடிப்படையில் அமைந்த ஒழுங்கமைதியினைப் பெற்றுள்ளன. அவை விலங்குகளையும் தாவர வகைகளையும் தமது புனிதப்பொருட்களாக ஏற்றுக் கொண்டு அணுகும் வழக்கத்தைக் கொண்டிருக்கின்றன. மேலும் அவ்வகை விலங்குகளைக் கொல்வதையோ உண்பதையோ தவிர்ப்பது மற்றும் தாவரங்களை அழித்தல் சேதம் விளைவித்தல் போன்ற செயற்பாடுகளை தடைசெய்யும் விலக்கல் கொள்கைகளையும் அவை கடைப்பிடித்து வருகின்றன என D.N மஜும்தார் கூறுகின்றார். (பக்தவக்சலபாரதி, *1990*) மஜும்தாரின் கருத்துப்படி வதனமார் வழிபாட்டில் மாடுகள் புனிதப்பொருளாகவும் கொல்லப்படத்தகாததாகவும் கருதப்படுகின்றமை கவனிக்கத்தக்கது.

மட்டக்களப்பில் கால்நடை வளர்ப்பவர்களுக்குரிய காவற்காரனாக வதனமார் விளங்குகின்றான். வதனமாருக்குரிய குலக்குறி அடையாளம் ''வெளுக்கயிறு'' ஆகும். வதனமார் எனும் கூட்டத்தினர் மனிதர்களாக வாழ்ந்து தெய்வங்களாக மாறியவர்கள் எனும் கருத்தினடிப்படையில் குலக்குறியினின்று வெளிப்பட்டு பாதுகாப்பினை அளிக்கும் முன்னோராக இருக்கின்றனர். இதில் குலக்குறியாகிய 'வெளுக்கயிறு' குறிப்பிட்ட குழுவோடு தொடர்புறுகின்றது. அதாவது கால்நடை மற்றும் விவசாயத்தினை செய்யும் குழுவினர் இணைந்து வழிபாடியற்றுவதால் வெளுக்கயிறு குழுக்குலக்குறிய முறையின் தன்மையினைப் பெறுகின்றது.

ஆகமம்சாரா வழிபாட்டில் வதனமார் வழிபாட்டின் குறியீட்டு வணக்கமுறையில் குலக்குறி மையத்தினை *03* விதங்களில் நோக்கலாம்.

1. இயற்கையோடிணைந்த காட்டின் மத்தியில் வதனமார் வழிபாடு இடம்பெறும்.
2. வயல்வெளிகளில் வதனமார் வழிபாடு.
3. வைரவர், குமாரர், காளி, மாரி போன்ற வழிபாடுகளில் வதனமாருக்கு பந்தல் அமைக்கப்பட்டு வழிபாடு இடம்பெறும்.

இந்த வழிபாடு ஆதிகாலத்தில் பட்டி அமைந்துள்ள இடத்தில் காடுகளுக்கு மத்தியில் நடைபெறும். அத்தருணம் பட்டியின் சொந்தக்காரப் போடிமார் குடும்பமும் பட்டிக்காரர் குடும்பமும் குழுவாகச் சேர்ந்து வழிபாடு இயற்றுவர். குழுமாடுகள் காட்டில் திரிந்து தன்னிச்சையாய் வளர்ந்ததால் அவை நல்ல தேகாரோக்கியமும் திடகாத்திரமும் உள்ளவைகளாகவும் இருக்கும். இவற்றை உழுதொழில் செய்வதற்குப் பயன்படுத்துவர். (ஈழத்துப் பூராடனார், *2000*)

வதனமார் வழிபாட்டில் குழுமாடு பிடித்தல் முக்கிய நிகழ்வாகும். பந்தலில் இருக்கும் வெளுக்கயிற்றை எடுத்துக் கொண்டு காட்டுக்குச் சென்று குழுமாடுகளை தேடிப் பிடித்து வெளுக்கயிற்றினை மாட்டின் கழுத்தினை நோக்கியவாறு வீசி பிடித்து அடக்குவர். இவ்வாறு காடுகளில் புகுந்து குழு மாடுகளைப் பிடித்து அடக்கும் போது மனனஞ் செய்து வைத்திருக்கும் மந்திரப் பாடல் வரிகளையும் தமக்குள்ளே உச்சரித்துக் கொண்டு செயல்படுவர். பிடிக்கப்பட்ட

குழுமாட்டினை வதனமாருக்கு உரியது என கூறி பட்டியில் உள்ள ஏனைய மாடுகளுடன் இணைத்து விடுவர். அது ஒரு வீர விளையாட்டோடு தொடர்புபட்ட சடங்குமுறை ஆகும். குழுமாடு பிடிக்கச் செல்வோர் ''இளந்தாரிமார் கூட்டம்'' என அழைக்கப்படுகின்றார்கள். (ஈழத்துப் பூராடனார், 2000)

வைரவர், குமாரர், காளி, மாரி போன்ற வழிபாடுகளில் வதனமாருக்குப் பந்தல் அமைக்கப்பட்டும் வழிபாடு இடம்பெறும். அவ்வேளை பூசாரி மீது வதனமார் வந்து முற்படுவார். அப்போது அவர்கள் பந்தலில் இருக்கும் கயிற்றை எடுத்துக் கொண்டு ஆடுவதுடன் ''ஹாய்'' எனச் சத்தமிட்டு மாடுகளை விரட்டுவது போல் அபிநயித்து ஆடுவர். வயல்வெளிகளில் நேர்த்தியாக ''பூமடை'' வைக்கப்படும். வயலில் நெல் விதைப்பதற்கு முன்னரும் வயல் வெட்டி முடிவடைந்த பின்னரும் இம்மடை வைக்கப்படும். பூமடையில் வெற்றிலை, பாக்கு, பழம் என்பன சாதாரணமாக வைக்கப்படும். வைரவர், காளி, வீரபத்திரர், வதனமார் ஆகியோருக்கு மடை வைக்கப்படும். வைரவர், குமாரர், காளி, மாரி போன்ற கோயில் வழிபாடுகளில் காவல்தெய்வமாக வதனமார் வழிபடப்படுகின்றார்.

பண்டைக்காலத்தில் மட்டக்களப்பு பிரதேசத்தில் பட்டிக்காரர்கள் அவர்களின் காட்டின் மத்தியில் தனிமை வாழ்க்கையில் வதனமார் வழிபாடு பற்றிய நம்பிக்கைகளில் நிலைத்து நின்றதுடன் வருடாவருடம் வதனமார் சடங்கினை செய்வதுடன் வதனமார் காவியங்களை மனனஞ் செய்து வைத்து இரவில் பாடித் தமது மனப்பயங்களை அகற்றியும் வாழ்ந்து வந்தனர். காட்டுவெளியின் மத்தியில் பட்டிகள் அமைக்கப்பட்டிருக்கும். பலம் வாய்ந்த கருங்காலி, திருக்கொன்றை, முதிரை முதலிய மரங்களைக் வெட்டி வந்து நட்டு எதுவும் நுழையாது வட்டமாக வேலியடைத்து அதற்குள் மாடுகள் அடைக்கப்பட்டிருக்கும்.

அதிகாலையில் பாலினை கறந்த பின்னர் வெளியே மேய விட்டு மாலையானதும் அவற்றை ஒன்று திரட்டி மீண்டும் அடைப்பர். உள்ளே இருக்கும் மாடுகள் வெளியே வராது இருக்கவும் உள்ளே கொடிய மிருகங்கள் உட்செல்லாமல் இருப்பதற்கும் வதனமாரை நோக்கி மந்திரம் சொல்லப்படும். அவ்வேளை மூன்று தடவை நிலத்தில் காலால் கோடிட்டு மறித்து ஆணை செய்யப்படும். (ஈழத்துப் பூராடனார், 2000) இங்கு குலக்குறி ஒரு பாதுகாவலனாக உறவினனாக உதவியாளனாக மூதாதையாக காட்டுப்பகுதியில் வாழ்ந்த குழுவினரால் நோக்கப்படுகின்றது. குலக்குறியியம் சார்ந்த சடங்குகளை நிகழ்த்தி சமயப் பண்புக்கூறுகளில் மந்திரத்தோடு தொடர்புடையதாக வதனமார் சார்ந்த குலக்குறிய வழிபாடு காணப்படுகின்றது.

### *6.7 முன்னடித் தம்பிரான்*

வதனமாரில் ஒருவர் முன்னடித் தம்பிரான் ஆவார். ஆகமம்சாரா வழிபாட்டில் முன்னடித் தம்பிரானுக்குரிய குலக்குறி அடையாளம் ''மாடு'' ஆகும். குலக்குறி மையம் ''பட்டி'' ஆகும். இங்கு மாட்டினைப் பட்டியினுள் அழைத்து வழிபாடு நடைபெறும். ஏனைய சடங்கு முறைகளை விட வித்தியாசமானதாக காணப்படுகின்றது. இது குறிப்பிட்ட குழுவினை சேர்ந்தோரால் நிகழ்த்தப்படும் குழுமுறைக் குலக்குறியாகும்.

இத்தெய்வத்திற்கு இரண்டு முறைகளில் சடங்கு நடாத்தப்படும்.

1. பட்டிகளுக்கு அருகில் உள்ள காட்டில் நடைபெறும்
2. வயல்வெளியின் மத்தியில் பட்டி அமைக்கப்பட்டு வழிபாடு இடம்பெறும்

ஆகமம்சாரா வழிபாட்டில் வைரவர் பந்தலை விட இத்தெய்வத்திற்கு பெரிதாக பந்தலினை அமைத்து இலை, குழைகளினால் அலங்கரித்து வழிபாடியற்றப்படும். இதில் பச்சை அரிசியினையும் பாலினையும் சேர்த்து பொங்கல் செய்வர். அதில் வேறெந்தப் பொருளும் சேர்க்கப்படமாட்டாது. (ஈழத்துப் பூராடனார், 2000) அகப்பையினை பயன்படுத்தாமல் பொங்கலைப் பொங்க வேண்டும். வாழைப்பழத்தினை குலையோடு பந்தலில் வைத்து வெற்றிலை, பாக்கு, பூக்கள் என்பவற்றினையும் மடையில் வைத்து வழிபாட்டினை ஆரம்பிப்பர்.

ஆண்டு தோறும் பட்டிக்காரர்களால் இரண்டு தடவை நிகழ்த்தப்படுகின்றது.

1. இளங்கன்று பால்
2. முதியான் கன்று பால்

மாடு முதற் கன்று ஈன்றதும் இளங்கன்று பால் எடுத்து பொங்கல் செய்யப்படும். இளங்கன்று வளர்ந்த பிற்பாடு அதன் பாலை எடுத்து சடங்கு செய்வர். இது முதியான் கன்று பால் எனப்படும். இரு தடவை செய்ய முடியாதவர்கள் ஒரு தடவை மாத்திரம் செய்யும் சந்தர்ப்பங்களும் உண்டு. (ஈழத்துப் பூராடனார், 2000) பந்தல் போட்டு அப்பந்தலில் முக்காலி கட்டி அம்முக்காலியிலும் பொங்கல், பழம் படைக்கப்படும். இச்சடங்கானது முறையாக பூசாரியினால் செய்யப்பட்டால் முன்னடித்தம்பிரான் பூசாரியினுள் வெளிப்படுவார்.

பொங்கலை படைத்து விட்டு காட்டிலேயே அதனை விட்டு வருவர். அதனை வீட்டிற்கு எடுத்து வரமாட்டார்கள். பின்னர் படைத்த பொங்கலை காட்டிற்குச் சென்று தான் உண்ண வேண்டும் என்ற கட்டுப்பாட்டினை விதித்துள்ளனர். குறிப்பாக வீட்டிலுள்ள பெண்கள், குழந்தைகள் இப்பொங்கலை உண்ணக்கூடாது. (ஈழத்துப் பூராடனார், 2000) குலக்குறி மீதான பயத்தினையும் மதிப்பினையும் இவ்வழமைகள் எடுத்துக் காட்டுகின்றன.

### *6.8 நாகதம்பிரான் வழிபாடு*

இந்துக்களின் ஆகமம் மற்றும் புராணங்களில் நாகதம்பிரான் எனும் தெய்வம் பற்றிய குறிப்புகளும் அவருக்குரிய வழிபாடுகளும் உள்ளன. அவர் பற்றிய உருவ வர்ணனைகளைப் புராணங்களில் காணலாம். ஆனால் மட்டகளப்புத் தேசத்தில் ஆகமம்சாரா வழிபாட்டில் நாகதம்பிரான் குலக்குறிய வழிபாட்டிற்குரிய பண்புகளைக் கொண்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. குலக்குறி வழிபாட்டில் ஒரு விலங்கு முக்கியம் பெறும் எனும் அடிப்படையில் இங்கு பாம்பு குலக்குறியாக வழிபடப்படுகின்றது.

இங்கு இடம்பெறும் நாக வழிபாட்டில் குலக்குறி மையங்கள்

1. வயல்நிலங்கள்
2. மரத்தடி (அரசு, வேம்பு)
3. குளக்கரை

நாக வழிபாட்டில் குலக் குறியின் தன்மைகளை 3 இடங்களில் காணலாம்.

1. பாம்பு வடிவம் செதுக்கப்பட்ட கற்கள்
2. உலோகம், மரம் போன்றவற்றினால் செய்யப்பட்ட வடிவம்
3. வரையப்பட்ட பாம்பு உருவம்

நாக வழிபாட்டில் பாம்புக் குறியானது விலங்கினைச் சார்ந்ததாக உள்ளது. மட்டக்களப்பு வாழ் பிரதேச மக்களின் வயல் நிலங்களை சீவனோபாயமாகக் கொண்டுள்ள தொழில் முறையில் நாகவழிபாடு முக்கிய சடங்காக உள்ளது. வேளாண்மைச் செய்கையில் நாகதம்பிரானுக்கு பொங்கல் வழிபாடு நடைபெறும். ஏர்நாள், நெல் விதைத்தல் போன்ற சந்தர்ப்பங்களில் நாகதம்பிரானுக்கு பொங்கல் பொங்குவர். அதுமாத்திரமன்றி வயல் வெட்டுவதற்கு முன்னர் கதிர்களை கையால் வெட்டி வெயிலில் உலர வைத்து பொங்கல் பொங்கி நாகதம்பிரானுக்கு படைக்கப்படும். (சதாசிவம், 2022) வயல்வெளிகளில் பாம்பு தீண்டாமலிருக்கவும் தீண்டினாலும் உயிர் ஆபத்து ஏற்படாமலிருக்கவும் பயிர்களுக்கு கிருமித்தாக்கம் ஏற்படாமல் இருக்கவும் நாகத்தை வழிபடுகின்றனர். இக்குலக்குறியை கொல்லவோ உண்ணவோ தடை விதிக்கப்பட்டிருக்கும்.

மரத்தடி, புற்று போன்ற இடங்களில் நாகதம்பிரானுக்கு வழிபாடு செய்யும் போது வெண்பொங்கல், பால், பழம் என்பன கரைத்து வார்த்து, முட்டை முதலிய நைவேத்தியப்பொருட்கள் வைத்து சடங்கு நிகழ்த்தப்படும். ஆனால் கோயில்களில் பூசாரியார் பால், பழம் போன்றவற்றினைக் கரைத்து வைக்கும் போது வாய்க்கு சீலை கட்டப்பட்டு மறைப்பான இடத்தில் செய்யப்படும். பூசாரியின் மூச்சுக்காற்றும் ஏனையோரின் பார்வையும் படாவண்ணம் பத்தியமான முறையில் செய்ய வேண்டும். (கோபாலப்பிள்ளை, 2022) குறையேற்பட்டால் உயிர் ஆபத்து ஏற்படும் என்பது மக்களின் நம்பிக்கை. இது குலக்குறியின் மீதான வியப்பையும் அச்ச உணர்வின் வெளிப்பாட்டையும் காட்டி நிற்கின்றன.

### *6.9 பெரியசாமி வழிபாடு*

பெரியசாமி வழிபாடு மட்டக்களப்பில் காணப்படுகின்ற ஆகமம் சாரா வழிபாட்டு முறைகளில் ஒன்றாகும். கருங்காலிப்பொல், மரத்தினால் செய்யப்பட்ட வாள், ஈட்டி, வெளுக்கயிறு, முகக்களை என்பன பெட்டகத்தினுள் குறியீடுகளாக வைக்கப்பட்டுள்ளன. பெரியசாமிக்கு கோயில் இல்லை. குலக்குறி மையம் வனங்கள் ஆகும். பெரியசாமி கப்பலில் வந்து இறங்கிய தெய்வம் என்ற நம்பிக்கை இப்பிரதேச மக்களிடம் காணப்படுகின்றது. வருடத்திற்கொருமுறை வழிபாடு இடம்பெறுகின்றது. மரத்தடியின் கீழ் பந்தல் அமைத்து வழிபாடு செய்யப்படுகின்றது. பிற்பட்ட காலத்தில் இரண்டு வருடத்திற்கு ஒருமுறை நடைபெறுகின்றது. (கோபாலப்பிள்ளை, 2022) கப்புகன்மார் வம்சாவெளியினைச் சேர்ந்தோர் சடங்குகளை நடாத்துகின்றனர். சடங்கின் போது தவறு ஏற்பட்டால் மழை பெய்து சடங்கு முற்றாக தடைப்பட்டு நிறுத்தப்படும் எனும் அச்ச உணர்வு உள்ளதை அவதானிக்க முடிகின்றது. பெண்கள் பெரியசாமியின் குலக்குறி மையத்திற்கு செல்லக்கூடாது எனும் கட்டுப்பாடு உள்ளது. (கோபாலப்பிள்ளை, 2022) இவை இரண்டும் குலக்குறி மீதான பயஉணர்வினை வெளிப்படுத்துகின்றன.

## 7. முடிவுரை

மட்டக்களப்புத் தமிழகத்தில் ஆகமம்சாரா வழிபாட்டில் குலக்குறி வழிபாட்டின் மூலம் குறித்த குலத்தினர் தமக்குள் ஒன்றுபட்ட எண்ணங்களையும் ஒரு குலக்குறியின் வழியில் நிற்பதால் தாம் அனைவரும் இரத்த உறவினர் என்ற எண்ணத்தினையும் கொண்டு தம்மிடையே பரஸ்பர புரிந்துணர்வுடன் இணைந்து ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ தலைப்படுகின்றனர். தம்முடைய குலக்குறிகளானது தம்மை மட்டுமன்றி தம் ஊரினையும் காக்க வேண்டும் என்ற எண்ணத்தின் வழியே அவர்கள் தம் குலக்குறிகளிடம் வேண்டுவர். இதனால் தன்னலமின்றி அனைவரையும் காக்க குலக்குறியை வழிபடும் உயரிய எண்ணம் வெளிப்படுகிறது.

மேலும் தம்முடைய குலக்குறிகளே தம்மைப் பாதுகாப்பதாக இப்பிரதேச மக்கள் நம்புகின்றனர். இயற்கை அனர்த்தங்களிலிருந்தும் விபத்துக்களினின்றும் பகைவர்களிடமிருந்தும் வறுமையிலிருந்தும் தன்னை, தான் வழிபடும் குலக்குறியே பாதுகாக்கின்றது என்ற எண்ணம், நம்பிக்கை குறிப்பிட்ட மக்களிடம் காணப்படுவதால் அக்குறிப்பிட்ட மக்கள் தம் குலக்குறியை பாதுகாக்கும் தன்மையைப் பெறுகின்றனர். அதாவது குறிப்பிட்ட குலக்குறி விலங்காக இருப்பின் அதனை கொல்லவோ உண்ணவோ மாட்டார்கள். உதாரணமாக, இப்பிரதேசத்தில் வண்ணான் குலத்தைச் சேர்ந்தவர் ஆற்றினை குலக்குறியாகக் கொள்வதால் ஆற்றினை அசுத்தப்படுத்தவோ அதில் மணல் அகற்றவோ மாட்டார்கள். இதனால் இவ்வியற்கை அம்சம் பாதுகாக்கப்படுகிறது. இவ்வாறு அவற்றைப் பாதுகாக்காவிடின் அதன் மூலம் அவர்கள் தண்டிக்கப்படலாம் என்ற அச்சமும் அவர்கள் அதனை பாதுகாப்பதற்கு ஓர் காரணமாய் அமைகிறது.

குலக்குறி அம்சம் விலங்காய் இருப்பின் அதனை வீட்டில் வளர்க்கும் வழக்கமும் சமூகத்திலே காணப்படுகிறது. வேளாளர், முக்குவர் போன்ற குலத்தினர் வதனமாரை வழிபடுவதால் மாட்டினை தம் இல்லங்களில் வளர்க்கும் வழமையினைக் கொண்டுள்ளனர். ஏனைய குலத்தவர் பசுக்களை சீவனோபாயத்திற்காக வளர்ப்பதற்கும் இவர்கள் தம் குலக்குறியாகப் போற்றி வளர்ப்பதற்குமிடையில் வேறுபாடென்பது நிச்சயம் உண்டு. குறிப்பிட்ட குலக்குறிகளின் அடையாளங்களாகக் காணப்படும் கத்தி, அரிவாள், சாட்டை போன்ற பல்வேறு சின்னங்களை வீடுகளில் குறிப்பிட்ட குலத்தவர்கள் தங்கள் குல பொக்கிசம் போல் போற்றி பாதுகாக்கும் தன்மையும் சமூகத்தில் உண்டு. இதனை விட குலக்குறிகளினைக் குறிக்கும் விலங்குகள், பறவைகள் இறப்பின், தன் வீட்டின் உறுப்பினர் ஒருவர் இறந்தது போல் எண்ணி அவற்றிற்கு மரணக்கிரியை செய்து துக்கம் அனுட்டிக்கும் வழக்கமும் அக்குலக்குறிச் சமூகத்தவரிடையே காணப்படுகிறது.

அதுமட்டுமன்றி குறிப்பிட்ட குலக்குறி தம்மைப் பாதுகாப்பது மட்டுமன்றி அதுவே தமக்கு அனைத்து சகுணங்களையும் காட்டுவதாகவும் அக்குலக்குறியினால் தமக்கு எதுவும் தீங்கு ஏற்பட்டால் அதற்கு காரணம் தாம் குலக்குறியை வழிபட தவறிவிட்டோம். அதற்கு நாம் தீங்கு இழைத்துவிட்டோம். அதனாலேயே அவ்வாறு நிகழ்ந்தது என்றும் அதற்கான பரிகார பூசை என்பது கட்டாயமாக செய்யவேண்டும். இல்லையெனில் மேலும் மேலும் நாம் குலக்குறியினால் தண்டிக்கப்படுவோம் என்ற

எண்ணமும் சமூகத்தில் காணப்படுவதால் குறிப்பிட்ட குலம் தம் குலக்குறிக்கான பரிகாரச் சடங்குகளையும் மேற்கொள்கிறது.

அதாவது குலக்குறியானது வீட்டிற்குள்ளும் வீட்டிற்கு வெளியிலும் அருகிலும் அமைந்திருப்பதனாலும் குறிப்பிட்ட மக்கட் கூட்டம் தவறு செய்ய அஞ்சுகின்ற மனநிலையை உருவாக்குகிறது. குலக்குறியானது தவறு செய்தவர்களையும் பொய், சூள் கூறுபவர்களையும் தண்டிக்கும் என்ற எண்ணத்தால் மக்கள் தவறு செய்ய அஞ்சுகின்ற பண்பாட்டைக் குலக்குறியானது சமூகத்தில் வளர்க்கிறது. இக்குலக்குறிகளுக்காக நிகழ்த்தப்படுகின்ற சடங்கு முறைமைகளில் தமக்கும் தம் குலக்குறிகளுக்குமிடையிலான உறவு முறைமையினை அக்குறிப்பிட்ட குலமானது வெளிப்படுத்துகிறது. அதாவது குறிப்பிட்ட குலத்தின் தலைவர் அல்லது அக்குலக்குறிக்கான சடங்கை நிகழ்த்துவோர் அல்லது அக்குலமே தம் குலக்குறியினை உணர்த்தும் வண்ணம் ஏதாவதொரு அடையாளச் சின்னத்தில் தன்னை அடையாளப்படுத்திக்கொள்வர். இவர்கள் தம் உடலில் குருதியோடு கலக்கும் வகையில் அக்குலக்குறியைப் பச்சைக்குத்திக்கொள்ளும் வழமையுமுள்ளது. பாம்பு, பசுவின் முகம், கொம்பு முதலியவற்றை பச்சை குத்திக் கொள்ளும் வழமை மட்டக்களப்பில் பல பிரதேச மக்களிடம் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

மட்டக்களப்பிலே ஆகமம்சாரா வழிபாட்டில் சில குலக்குறிகளுக்கு பெரியளவில் விழாவும் சில குலக்குறிகளுக்கு பொதுவான பூசை முறையும் அதாவது பொருளாதார வசதியை கருத்திற்கொண்டும் பூசைகள் இடம்பெறுகிறது. இந்நிலைமைகளில் அது சமூகத்தை ஒற்றுமைப்படுத்துவதை முக்கிய நோக்காகக் கொண்டு செயற்படுகிறது. இதனால் குலத்தினை அடிப்படையாகக் கொண்ட குலக்குறியை சார்ந்த சமூகமும் தம் குலக்குறிக்கான பூசைகளின் போது தமக்குள் எத்தகைய தகுதிகளின் அடிப்படையில் வேறுபட்டிருந்தாலும் அத்தகைய தகுதிகள் நீக்கப்பட்டு அனைவரும் 'பக்தி' எனும் ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு 'பக்தன்' எனும் ரீதியில் ஒன்றுபட்டிருக்கும் நிலை ஏற்படுகிறது.

**உசாத்துணைகள்**

ஈழத்துப் பூராடனார். (2000). வதனமார் வழிபாடு – ஒரு மதிப்பீடு, ஜீவா பதிப்பகம். இலங்கை

சண்முகசுந்தரம்,சு. (1999). நாட்டுப்புற இயல். மணிவாசகர் பதிப்பகம்.

சிவசுப்ரமணியம்,வ. (2004). மட்டக்களப்பு நாட்டாரியல். வக்மி பதிப்பகம். கொழும்பு.

சிவரெத்தினம்,சு. (2006). சடங்குகளினூடாக மட்டக்களப்பு. விபுலம் பதிப்பகம். மட்டக்களப்பு.

சுகந்தி சுப்ரமணியம். (2002). மட்டக்களப்பு மாவட்டத்தின் கிராமிய வழிபாட்டுச் சடங்குகளும் அவை தொடர்பான பாடல்களும். இலண்டன் இந்து தமிழ் மன்றம்.

தங்கேஸ்வரி,க. (2008). கிழக்கிலங்கை வழிபாட்டுப் பாரம்பரியங்கள். மணிமேகலைப் பிரசுரம். சென்னை.

பக்தவக்சலபாரதி. (1990). தமிழர் மானிடவியல். புதுமை மொழியியல் பண்பாடு ஆராய்ச்சி நிறுவனம். புதுச்சேரி.

பக்தவக்சலபாரதி. (1990). பண்பாட்டு மானிடவியல். மெய்யப்பன் பதிப்பகம். சென்னை.

மகேஸ்வரலிங்கம்,க. (1996). மட்டக்களப்பு சிறு தெய்வ வழிபாடு ஓர் அறிமுகம். ஆதவன் அச்சகம். மட்டக்களப்பு.

மகேஸ்வரலிங்கம்,க. (2008). மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும். கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

மௌனகுரு,சி. (2013). மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப் பண்பாடு. 2ஆம் உலக இந்து மாநாடு. மட்டக்களப்பு பிரதேசக்கிளை.

லூர்து,தே. (2000). நாட்டார் வழக்காற்றியல்: சில அடிப்படைகள். நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம். பாளையம்கோட்டை.

வடிவேல் இன்பமோகன். 2012. கிழக்கிலங்கைச் சடங்குகள். குமரன் புத்தக இல்லம். கொழும்பு.